பதிவு அலுவலகம் : **57, V.E.ரோடு,**
**தூத்துக்குடி**-628002
மின்னஞ்சல் : **secretarial@tmbank.in**
CIN : U65110TN1921PLC001908

**Tamilnad Mercantile Bank Ltd**
Be a step ahead in life

# 94 முதல் 97 வரையிலான வருடாந்திர பொதுக்குழு கூட்டங்கள் மற்றும் மின் வாக்குப்பதிவு பற்றிய அறிவிப்பு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் 94 முதல் 97 வரையிலான வருடாந்திர பொதுக்குழு கூட்டங்கள் முறையே 2015-2016 முதல் 2018-2019ம் ஆண்டுகளுக்கானது, தூத்துக்குடி-628002, கதவு எண் 109-Eல் அமைந்துள்ள ஏ.வி.எம்.கமலவேல் மஹாலில் 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் நாள், வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் அந்தந்த பொதுக் குழுவிற்கான அறிவிப்பில் கூறப்பட்டுள்ள அலுவல்களை பரிமாற்றம் செய்வதற்காக **நிறுவனங்களின் சட்டம், 2013 இன் பிரிவு 102 இன் படி விளக்க அறிக்கையுடன்** நடத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. மேற்படி வருடாந்திர பொதுக்குழு கூட்டங்கள் மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் 06.02.2020 தேதி உத்தரவுக்கிணங்க நடத்தப்படவுள்ளது. **மாண்புமிகு** நீதி அரசர் திருஆர்.பாலசுப்பிரமணியன்(ஒய்வு) அவர்கள் வருடாந்திர பொதுக்குழு கூட்டங்கள் நடத்துவதற்கான தலைவராக நீதிமன்றத்தால் நியமிக்கபட்டுள்ளார்கள்.

நிறுவனங்கள் சட்டம், 2013 101 பிரிவின் படியும், கம்பெனிகள் மேலாண்மை மற்றும் நிர்வாகம், 2014 விதி 18 ன் படியும் மற்றும் பொதுக்குழு கூட்டங்களுக்கான செயலக தர நிலையின் படியும், மேற்படி வருடாந்திர கூட்டத்திற்கான அறிவிப்புகள் மற்றும் 2015-16, 2016-17, 2017-18 மற்றும் 2018-19க்கான வருடாந்திர அறிக்கைகளின் மின்னணு பிரதிகள் அனைத்து உறுப்பினர்களுக்கும் மார்ச் 7ம் தேதி 2020 வங்கி/வைப்பு பங்கேற்பாளரிடம் பதிவு செய்யப்பட்ட மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற் கூறியவை வங்கியின் இணையதளம் www.tmb.in- லும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கூறிய அறிவிப்புகள் மற்றும் நான்கு வருடாந்திர அறிக்கைகள் உறுப்பினர்களுக்கு வங்கியில் பதிவு செய்யட்டுள்ள முகவரிக்கு விரைவு தபால் மூலம், மார்ச் 9, 2020 தேதி அன்று அனுப்பி முடிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய அறிவிப்புகள் மற்றும் நான்கு வருடாந்திர அறிக்கைகள் கிடைக்காத உறுப்பினர்கள், அவற்றை வங்கியின் இணையதளமான www.tmb.in மற்றும் CDSL இணையதளமான www.evotingindia.com லிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பங்குகளை சான்று வடிவிலோ அல்லது மின்னணு வடிவத்திலோ ஏப்ரல் 02, 2020 அன்று வைத்திருப்பவர்கள், மேற் கூறிய அறிவிப்பில் குறிப்பிட்ட சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மீது தங்களது வாக்குகளை மின்னணு முறையில் சென்ட்ரல் டெப்பாசிட்டரி சர்விஸஸ் இந்தியா லிமிடெட் (CDSL) என்ற மின் வாக்கு ஏஜென்சி மூலம் தொலை மின் வாக்கு செலுத்தலாம். மேற்கூறிய முறையில் வாக்கு அளிக்காத உறுப்பினர்கள், தங்களது வாக்கினை பொதுக்குழு நடைபெறும் அரங்கிலும் மின்னணு முறையில் செலுத்தலாம். அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்,

1) அறிவிப்பில் குறிப்பிட்ட சாதாரண மற்றும் சிறப்பு அலுவல்கள் மின்னணு மூலம் நடைபெறும்.
2) தொலை மின் வாக்கு பதிவு திங்கள் கிழமை, ஏப்ரல் 6, 2020 காலை 9 மணிக்கு தொடங்கி புதன்கிழமை ஏப்ரல் 8, 2020 மாலை 5.00 மணிக்கு நிறைவடையும்.
3) **ஏப்ரல் 02, 2020 உறுப்பினர்கள் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் நடைபெற இருக்கும் வருடாந்திர பொதுக்குழு கூட்டங்களில் மின் வாக்கு அளிப்பதற்கு தகுதி உடையவர்களாக கருதப்படுவார்கள்.**
4) (1) மின் பதிவிற்கான பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல் CDSL மூலமாக பங்குதாரர்களுக்கு வங்கி/வைப்பு பங்கேற்பாளரிடம் பதிவு செய்யப்பட்ட மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும். மற்ற பங்குதாரர்களுக்கு பின் மெயிலர் பதிவு தபால் மூலம் அனுப்பபடும்.
   (2) உறுப்பினர்கள் மின் வாக்கு பதிவிற்கான விதிமுறைகள் பின்பற்றவும்.
5) மின் வாக்குப் பதிவில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் உறுப்பினர்கள் helpdesk.evoting@cdslindia.com இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட "அடிக்கடி கேட்க்கப்பட்ட கேள்விகள்" ( FAQs) மற்றும் மின் வாக்கு பதிவு கையேட்டில் பார்த்து சரி செய்து கொள்ளலாம். அல்லது 1800-255-533 என்ற இலவச தொலை பேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். வேறெதெனும் விபரங்களுக்கு அலை பேசி எண். 9566141888 ஐ தொடர்பு கொள்ளவும்.
6) பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல், தொலை மின் வாக்கு பதிவிற்காக உருவாக்கப்பட்டு, CDSL ஆல் நேரடியாக உறுப்பினர்களுக்கு அனுப்படுகிறது. உறுப்பினர்கள் அந்த பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லை மட்டுமே பயன்படுத்தவும்.
7) மேலும் உறுப்பினர்கள் தங்களது கைப்பேசி எண் மற்றும் மின் அஞ்சல் முகவரி முதலியவற்றை புதுபித்து கொள்ளலாம். மேற்படி புதுப்பிக்கப்பட்ட முகவரிக்கு செய்திகள் / தகவல்கள் அனுப்பப்படும்.
8) மின்வாக்குப் பதிவினை ஆய்வு செய்ய மற்றும் மின்வாக்குப்பதிவினை உண்மையாகவும், வெளிப்படை யாகவும் நிகழ்த்த நிறுவன செயலாளர் மற்றும் (ICSI)-ன் துணை தலைவருமான திரு.நாகேந்திர டி ராவ், அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.
9) வருடாந்திர கூட்டத்திற்கான அறிவிப்புகள் வங்கியின் உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட பிறகு, இறுதி நாளாக அறிவிக்கப்பட்ட 02, ஏப்ரல் 2020, தேதிக்கு முன்பு எவரேனும் வங்கியின் பங்குகளை வாங்கியிருப்பின் அவர்களுக்கான பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல் முதலியவற்றை பெற மின் அஞ்சல் helpdesk.evoting@cdslindia.com அல்லது இலவச தொலைபேசி எண் 1800- 225- 553 மூலம் தொடர்பு கொள்ளலாம். மேலும் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்புகள் பெற்றவர்கள் இறுதி நாள் முடிவு பெறும் போது உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெறாத பொருட்டு மின்வாக்கு பதிவினில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.
10) கடவுச்சொல் மறந்த உறுப்பினர்கள் தங்களுக்கான கடவுச்சொல்லை www.evoting.cdsl.com எனும் இணையதளம் வாயிலாக "forgot user details / password" என்ற விருப்பம் மூலம் மாற்றிக் கொள்ளலாம்.
11) இறுதி நாள் அன்று உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெறும் உறுப்பினர்கள் மட்டுமே தொலை மின் வாக்குப்பதிவு மற்றும் மின் வாக்குப்பதிவிற்க்கு ஏற்ப்புடையவர்களாக அறிவிக்கப்படுவர்.
12) வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறும் நாளன்று முறையான வருகைசீட்டு மற்றும் அடையாள சான்றுடன் வரும் உறுப்பினர்கள் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். மேலும் proxy - ஆக வருபவர்கள் முறையான அடையாள **சான்றை** நிருபிக்கும் பட்சத்தில் மட்டுமே கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

**தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி-க்காக**
**பிரகாஷ் சந்திர பாண்டா**
**கம்பெனி செக்ரட்டரி**

தூத்துக்குடி
10.03.2020